REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 23உ செவ்வாய் (5—2—57) ★ ★ வெளியூர்: தை 24உ புதன் (6—2—57) [இதழ் 205

கேட்டது 16 கோடி; கிடைத்தது 13 கோடி

புதுடில்லி, பிப். 4—

விசைத் திட்டங்களுக்காக ரூ. 16 கோடி தேவையென சென்னை சர்க்கார் கேட்டிருந்ததாம். பரிசீலனைக்குப் பிறகு அத் தொகை ரூ. 18,13,00,000 ஆகத் திட்டக்குழு குறைத்துவிட்டது.

புதிய மின்சார நிறுவனங்களை சென்னை அரசாங்கம் ஏற்று நடத்த ரூ. 1-கோடி செலவில் திட்டம் தீட்டித் தந்திருந்தனராம்

(4-ம் பக்கம் பார்க்க)

நேரு பண்டிதர் எதிர்வீட்டு மாம்பழம்; நாம், நம் தோட்டத்துக் கீரை!

சங்கீதம் கேட்க, சந்தோஷம் கொண்டாட ஓடிவரும் நேரு

தேம்பியழுவோரைத் தேற்ற வராதது ஏன்?

காஞ்சியில் அண்ணா விளக்கம்

3-2-57-ல் காஞ்சி சண்முகம் நினைவு மன்ற ஆண்டு விழாக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்தது; தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது:

"அரியலூர் இரயில் விபத்திற்குப் பிறகும் பதவியிலிருந்து விலகாதது ஏன்—என்று உதவி மந்திரி அழகேசன் அவர்களைக் கேட்டபோது, அவர் 'நான் பதவியிலிருந்து விலகிவிட்டால் சர்க்கார் நடைபெறாது,' என்று கூறினாராம்.

"நான் கேட்க விரும்புகிறேன்—சர்க்கார் என்பது இந்த மந்திரிமார்கள் அல்லவே!

"ஜான் மத்தாய், சிந்தாமணி தேஷ்முக் முதலானோர் விலகினார்கள்; சர்க்கார் கவிழ்ந்தா போய்விட்டது? சர்க்காரில் மந்திரிமார்கள் இன்று ஓடிக்கொண்டிருக்கும் இயந்திரத்திற்குக் 'கிரீஸ்' பூசுபவர்களாகத்தானே இருக்கிறார்கள்? ஒரு மணி நேரம் 'கிரீஸ்' பூச ஆளில்லாவிட்டால், இயந்திரம் ஒன்றும் பழுதாகிவிடாதே! மந்திரி அழகேசனின் கூற்று, தேர் ஒன்றில் ஒட்டிக்கொண்டிருக்கும் பல்லி, தான் இல்லாவிட்டால் தேரே ஓடாது என்று கூறுவதைப் போலல்லவா இருக்கிறது?

"இவர், டில்லியின் எஜமானர்களுக்கு விசுவாசமும் உண்மையுமுள்ள ஊழியருக்கும் ஊழியர்தான் என்பதை நாட்டவர் அறியாததுபோல் 'நாம்தான் டில்லி சர்க்காரின் கர்த்தா,' என்று நினைத்துக்கொண்டு பேசுகிறார்!

"அரியலூர் விபத்துக்களால் மக்கள் மாண்டது போதாது என்றுதானோ என்னவோ காங்கிரஸ் ஆட்சியாளர்கள், வால்பாறையில் நான்கு பேர்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள்.

"அங்கே நான்கு பிணங்களை கிடத்திவிட்டுத்தான் இங்கே வந்து ஓட்டுக் கேட்கிறார்கள்.

"மக்கள் எப்படி ஓட்டுத் தருவார்கள்?

"நேரு பண்டிதரை அழைத்து வருகிறார்கள்; அவரும் ஓடோடி வருகிறார் ஓட்டுக் கேட்க!

"இரண்டொரு நாளைக்கு முன், திருமதி மவுண்ட்பாட்டனுடன்—அந்த அளவு ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சிகொண்டவர் — சென்னை வந்தாரே நேரு—ஓட்டுக் கேட்பதற்காக!

"நூற்றுக் கணக்கான பேர்கள், விபத்திலே மாண்டார்கள்; தந்தையை இழந்தோர், மகனை இழந்தோர், மனைவியை இழந்தோர், குழவிகளை இழந்தோர், அனாதைகளானோர் எல்லோருமாகக் கதறி அழுதார்களே! தேம்பினார்களே! நேரு பண்டிதர் வந்தாரா? 'தேம்பாதீர்கள்; என் செய்வது? உற்பாதம் நிகழ்ந்துவிட்டது; மகனை இழந்தோரே — என்னை உம் மகனாக ஏற்றுக்கொள்ளுங்கள்! தந்தையை இழந்தோரே—என்னை உம் தந்தையாக ஏற்றுக்கொள்ளுங்கள்'—என்று ஆறுதல் கூற வந்தாரா?

"அரியலூரில் உருவமே சிதைந்து, கைவேறு கால்வேறாகி கூழாகிப்போன பிணங்களைக் குழி தோண்டிப் போட்டு, பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தினார்கள்—என்று, பத்திரிகைகளில் செய்தி வந்ததே, ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டாரா, நேரு?

"இப்போது மட்டும்தான், இப்படி நடந்துகொண்டாரா என்றால் எப்போதுமேதான் அப்படி!

"ஓராண்டுக்கு முன்னர், தமிழ் நாட்டில் வெள்ளம் பெருக்கெடுத்தது; புயல் கொடுமை புரிந்தது; ஆயிரக் கணக்கான மக்கள் அனாதைகளாகி தவித்தனர்; பலர் உயிரிழந்தனர்; நேரு பண்டிதர் வந்தாரா?—வந்தார்; வந்தவர், நேரே திருவனந்தபுரம் சென்றார். 'இங்கே, காடுகள் உண்டாமே! அங்கே, யானையும், புலியும், சிறுத்தையும் நிரம்ப உண்டாமே! நான் அவைகள் விளையாடுவதைப் பார்க்க வேண்டும் — நள்ளிரவில்' என்றார். அதிகாரிகளுடன் சென்று, கண்ணாடி மாளிகையில் ஏறி, பெரிய பூதக்கண்ணாடிகளின் துணையோடு யானைகள் விளையாடுவதையும், புலிகள் காதல் பேசுவதையும் கண்டு கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார். இங்கே—தமிழ் நாட்டில், எத்தனையோ தாய்மார்கள் மாரடித்து அழுது கொண்டிருந்தனர். நேரு, வன விலங்குகளின் காதல் விளையாட்டுக்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். இந்தச் சம்பவம், ரோம் நகரம் பற்றி எரியும்போது பிடில் வாசித்த நீரோ மன்னனை நினைவூட்டுவதாயிருக்கிறது. இதை, நியாயம்தானா என்று கேட்கக்கூடாதா?

"ஆனால், இதே நேரு, அசாமில் வெள்ளம் என்றால், பம்பாயில் பூகம்பம் என்றால், பீகாரில் வெள்ளம் என்றால், விமானத்தில் ஏறிச் சென்று, அந்த மக்களைப் பார்த்து, ஆறுதல் கூறுகிறார்; தந்தி-மணியார்டரில், பணம் அனுப்பிவைக்கிறார்!

"தமிழ் நாட்டில் வெள்ளம், புயல், விபத்து என்றால் வருவதில்லையே! 'தான் ஆடாவிட்டாலும் சதையாடும்,' என்பார்கள்; நேரு பண்டிதருக்கு ஆடவில்லையே ஏன்! 'எங்களவர்' என்று பேசுகிறவர்கள்—வாதாடுகிறவர்கள் இதை எண்ணிப் பார்க்கவேண்டாமா?

"நாய் ஒன்று செத்துவிட்டால், அதனைச்சுற்றி பல நாய்கள் கூடி குந்தி அழுவதில்லை; ஆனால், மனிதர்கள் அப்படியல்லவே! அந்த மனித உணர்ச்சிதானே மனிதர்களையும் விலங்கினங்களையும் வேறுபடுத்துகிறது?

"அகில உலகப் புகழ் பெற்றவர் — பஞ்சசீலம்,' பேசும் பண்டிதர் உலகத்தவருக்கெல்லாம் உபதேசம் புரியும் பெருங்குணம் படைத்தவர், அவருக்கு ஏன், இந்த மனித உணர்ச்சி ஏற்படவில்லை?

"நேரு பண்டிதர் தமிழ் நாட்டுக்கு வருகிறார், சந்தோஷம் கொண்டாட! திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியை அவர் வீட்டில் போய்ப் பார்த்து வருகிறார். அதற்கு நேரம் கிடைத்தது, ஆவடிக்கு வந்தபோது! புயலால்—வெள்ளத்தால்—விபத்தால் அழுகுரல் எழும்போது அவருக்கு நேரம் கிடைக்கவில்லை போலும்!

"சங்கீதம் கேட்கவும், நாட்டியம் காணவுமான நிகழ்ச்சிகளுக்கு வருகிறார்; அழுகுரல் எழும்போது வருவதில்லை! இவரை எப்படி நாம், நம்மவர் என்று ஏற்றுக்கொள்வது?

"எனவேதான் நாம் கூறுகிறோம் — நேரு பண்டிதர், எதிர் வீட்டு மாம்பழம்! நாம தோட்டத்துக் கீரையாகக் கூட இருக்கலாம்; ஆனாலும், நம் தோட்டத்துக் கீரை! இந்தக் கீரைதான் அந்த வீட்டுக்காரருக்குப் பயன்பட முடியுமே தவிர, எதிர் வீட்டு மாம்பழம் பயன்பட

(4-ம் பக்கம் பார்க்க)

★-★★★★★★★★★★★★★★★-★

திருவண்ணாமலை

பாராளுமன்றத் தொகுதிக்கு

தி.மு. கழக அபேட்சகராக

இரா. தர்மலிங்கம்

நிறுத்தப் பட்டிருக்கிறார்

தலைமைக் கழகம் (தி. மு. க)

★-★★★★★★★★★★★★★★★-★

★★★★★★-★★★★★★★-★★★★

'உதய சூரியன்'

★

சென்னை நகரில், சட்டசபைத் தொகுதிகளுக்குப் போட்டியிடும் தி. மு. கழக அபேட்சகர்கள் அனைவருக்கும் உதய சூரியன் சின்னமே கிடைத்துவிட்டது.

பேசின்பிரிட்ஜ் தொகுதியில் போட்டியிடும் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்குப் போட்டியாக மற்றுமொரு தோழர், உதய சூரியன் சின்னத்தையே கேட்டிருந்தார். ஆனால், நேற்று பகல் சென்னை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் கூடியிருந்த மாற்றுக்கட்சி அபேட்சகர்கள்கூட, தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கே உதய சூரியன் சின்னம் வழங்கப்பட வேண்டும் என விரும்பினர். என்றாலும் தேர்தல் அதிகாரி, சட்டவிதிகளுக்கு உட்பட்டு, குலுக்குச் சீட்டுப் போட்டெடுத்ததில், தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கே உதய சூரியன் சின்னம் கிடைத்தது!

அலுவலகத்திற்கு வெளியே கூடியிருந்த கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் இதுகேட்டு, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

தமிழருக்கு மானக்கேடு தேடுகிறது காங்கிரஸ் சர்க்கார்

சஞ்சீவியின் துணிவும்—காமராசரின் பணிவும்

சென்னை வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டின் கீழ்

1957—58-ம் ஆண்டிற்கான திட்டச் செலவுக்கு ரூ. 42,13,00,000 தேவைப்படுமென்று சென்னை அரசாங்கம் தெரிவித்திருந்தது.

சென்னையின் கோரிக்கைகளைப் பரிசிலனை செய்த திட்டக்குழு, ரூ. 34,02,00,000 ஆக அதைக் குறைத்துவிட்டிருக்கிறதாம்; எனவே, சென்னையின் திட்டச் செலவில் ரூ 8,11,00,000 குறைக்கப்பட்டிருக்கிறது.

அன்று ஆந்திர மாநிலம் அளித்த பதிலென்ன?

1957—58-ல், ஆந்திர மாநிலத்தில் திட்டச் செலவிற்கு ரூ 34,02 00,000 தேவைப்படுமென்று ஆந்திர அரசு அறிவித்தது.

திட்டத்தைப் பரிசிலனை செய்த திட்டக்குழு, திட்டத்தில் ரூ 1 கோடியைக் குறைத்துக் கொள்ளுமாறு கோரியது.

அவ்வாறு குறைத்துக் கொண்டால் ஆந்திர மாநிலத்தின் திட்டங்கள் பாதிக்கப்படும் என்றுகூறி, ஆந்திர அரசாங்கம், திட்டக் குழுவின் வேண்டுகோளை நிராகரித்துவிட்டதென்பது நினைவிற்குரியதாகும்.

கழக அபேட்சகர்களுக்குச் சின்னம்

அண்ணாவுக்கு 'உதய சூரியன்'

பொதுச்செயலாளருக்குக் கிட்டவில்லை

தி. மு. கழக அபேட்சகர்கள் பலருக்கு அவர்கள் கோரியிருந்த 'உதய சூரியன்' சின்னம் கிடைத்துள்ள தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

அண்ணா அவர்களுக்கு 'உதய சூரியன்' சின்னம் தரப்பட்டுவிட்டது.

சேலத்தில் போட்டியிடும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு 'உதய சூரியன்' சின்னம் கிடைக்கவில்லை. வேறு ஒரு சுயேச்சையாளரும் தனக்கு 'உதய சூரியன்' சின்னம் கிடைக்க வேண்டுமெனக் கேட்டிருந்ததில், குலுக்குச் சீட்டு போடப்பட்டபோது, பொதுச்செயலாளருக்கு 'உதய சூரியன்' சின்னம் கிடைக்கவில்லை; 'கோழி' சின்னம் கிடைத்திருக்கிறது.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கு 'உதய சூரியன்' சின்னம் கிடைத்தது.

தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கும் 'உதய சூரியன்' சின்னம் கிடைத்துவிட்டது.

இதர் சின்னம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை —2—'57 செவ்வாய்

சேரிகள் ஒழிய!

★

சென்னை நகரசபையினர், நகர அபிவிருத்திக்கென ஒரு திட்டம் தயாரித்து, சர்க்காருக்கு அனுப்பிவைத்தனர்.

சேரிகளை ஒழித்தல், மகப்பேறு விடுதிகள் அமைத்தல், நல்லகுடி நீர் வசதி செய்தல், துவக்கப்பள்ளிகள் அமைத்தல், சாலைகள் போடுதல் போன்ற சில இன்றியமையாத பணிகளை மேற்கொள்ளுவதற்கான திட்டம் அது. இதனை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்பது நகரசபையின் அவா.

சென்னை சர்க்கார், தாங்கள் அனுப்பிவைக்கும் திட்டத்தினை, தங்களது டில்லிவாழ் எசமானர்கள் வெட்டியனுப்புவதைப் போல, நகரசபை தங்களிடம் அனுப்பி வைத்தத் திட்டத்தை வெட்டினார்கள்.

நகரசபை, திட்டத்திற்காகத் தேவை எனக் கேட்டது, பன்னிரண்டு கோடியே இருபத்து ஒன்பது இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாய்.

சென்னை சர்க்கார், 'அவ்வளவு பெரிய தொகையை எப்படித் தருவோம்—எப்படித் தர முடியும்! எனவே, திட்டத்தைச் சுருக்குங்கள்' என்று சொல்லி, நான்கு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சம் ரூபாய் அளவுக்குத் திட்டத்தைச் 'சரி' செய்தார்கள்.

இந்தச் சுருங்கிய திட்டமாவது நிறைவேறுமா என்றால், அதுதான் இல்லை என்கிறார் நகரசபைத் தலைவர்.

இதுவரை, நகரசபையின் நகர வளர்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபாய்தான்.

சேரிகள் ஒழிய, நல்ல குடிநீர் கிடைக்க, மருத்துவ விடுதிகளும் பள்ளிகளும் திறக்கத் தேவை என்று கேட்டதோ, பன்னிரண்டு கோடிக்கு சற்று அதிகம்; கிடைப்பதோ ஒன்றேகால் கோடி.

'என்செய்வோம், ஏமாற்றப்பட்டோம் நாங்கள்' என்கிறார் தலைவர்.

இந்த அவலநிலையைப் பற்றி நாம் எழுதுமுன், நகரசபைத் தலைவர் அண்மையில் நகருக்கு வந்திருந்த பண்டிதரிடம் முறையிட்டாராம், இது பற்றி.

'நீங்கள்தான், நாங்கள் நடந்து செல்லும் இருண்ட பாதையில் வழிகாட்டும் ஒளி நட்சத்திரம்' என்று கூறி, 'உதவுங்கள்' என்று கேட்டாராம், நகரசபைத் தலைவர்.

பாவம்! ஆசை வெட்கமறியாது என்பார்கள். இப்படியெல்லாம் முறையிட்டாலாவது, தமிழ் மக்கள்மீது பண்டிதருக்கு 'இரக்கம்' பிறக்கச் செய்யலாம்—கணிசமான உதவி பெறலாம் என்று நகரசபைத் தலைவர் கருதினார் போலும். ஆனால்......

சேரிகளைக் கண்டபோதெல்லாம் சிறிவிழுந்திருக்கிறார், பண்டிதர்; ஒரு முறையல்ல, பல முறைகள். "இந்த அவலம் நகரின் நடுவே நீடிப்பதை என்னால் சகிக்க முடியவில்லை" என்று நீலிக் கண்ணீர் வடிக்கவும் அவர் மறந்ததில்லை. ஆனால், சேரிகளை ஒழித்துவிட்டு, சேரி வாழும் மக்களுக்கு, உயர்தரமானதாக இல்லாவிட்டாலும் சாதாரண வீடுகள் கட்டித் தருவதற்கேனும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்றால், இல்லை.

திட்டம் தீட்டுகிறார்கள்—ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. ஆனாலும் சேரிகள் சுதந்திரம் வந்து பத்து ஆண்டுகளாயும் நீடிக்கின்றன; எண்ணிக்கை வளருகிறது.

இந்த நிலையிலும், ஓட்டுக் கேட்க வருகிறார்கள், மாட்டுப் பெட்டியைக்காட்டி! மிகுந்த நெஞ்சுரம் வேண்டும், இதற்கு.

சென்னை நகரில் மட்டும் 300 சேரிகள் இருக்கின்றனவாம். அவைகளில் இரண்டரை இலட்சம் மக்கள் வாழுகிறார்களாம்—கணக்குத் தந்திருக்கிறார், நகரசபைத் தலைவர்.

இரண்டரை இலட்சம் மக்கள், நாகரிகமான சென்னை நகரில் — இராசபவனங்களும் அரசாங்க மாளிகைகளும் வானளாவி நிற்கும் நகரில், சேரிகளில் — நாலடிக் குச்சுக்கள், அவற்றைச் சுற்றிலும் சிற்றாறுகளெனச் சாக்கடை; அவற்றில் பிறந்து வளர்ந்து, பிணிபலவும் பரப்பும் கொசுக்களும் புழுக்களும்; அந்தச் சாக்கடை ஓரத்திலேயே படுத்துப் புரண்டு மகிழும் சிறார்கள். இந்தக் காட்சிகளைக் கொண்ட சேரிகளில்—இரண்டரை இலட்சம் மக்கள் வாழுகிறார்களாம். தவறு, தவறு; வாழவில்லை அவர்கள்—காலத்தை ஓட்ட முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அவலநிலையைப் போக்குவதற்கு, பத்து ஆண்டுகளாக 'சுதந்திர'த்தின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கும் காமராசர்களால் முடியவில்லை.

இப்போதுதான் திட்டம் தீட்டுகிறார்கள். அதற்கும் டெல்லிப் பெரியவர்கள் உதவுவதாகக் காணோம்; 'ஏமாற்றப்பட்டிருக்கிறோம்' என்கிறார், நகரசபைத் தலைவர்.

சேரி வாழும் மக்களே! அவர்களுக்கு நாகரிகமான தோர் வாழ்வுதர வேண்டும் என்ற எண்ணங் கொண்டோரே! எண்ணிப் பாருங்கள், இந்த அவலநிலையை!

தேர்தல் நெருங்குகிறது! சேரிகளைத் திருத்தியமைக்கக்கூட இதுவரை எண்ணம் கொள்ளாத ஏழை எளியோரை மறந்தவர்களுக்குப் பாடம் புகட்டத் தவறாதீர்கள். இந்த நாட்டுமக்களை மறந்தவர்களையும் இந்த நாட்டவரை வடவருக்கு அடிமைகளாக்கி வைத்து, அவர்களிடத்தில் கையேந்தி நிற்கச் செய்து வேதாந்தம் பேசுபவர்களையும், தட்டிக் கேட்க, தி.மு. கழகத்திற்கே வாக்களிக்கத் தவறாதீர்.

சின்னம் வழங்க மேற்கொள்ளப்படும் முறை சுலபமானதாகிவிட்டதாம்!

புதுடில்லி, பிப். 4—

தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்குச் சின்னம் வழங்குவதில் கையாளப்படும் முறைகள், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சில சட்ட விதிகளின் காரணமாகச் சுலபமாக்கப்பட்டுவிட்டனவாம்!

"சின்னங்கள் ஒதுக்கும்போது, தேர்தல் அதிகாரி, ஒவ்வொரு அபேட்சகரும், தான் முதன்முதலாகத் தாக்கல் செய்கின்ற அபேட்சைப் பத்திரத்தில் எந்தச் சின்னம் தேவை என்று குறிப்பிடுகிறாரோ, அந்தச் சின்னத்தைக் கொடுப்பது குறித்துப் பரிசீலனை செய்வாராம். அபேட்சகர்முதன்முதல் கேட்டிருந்த ஒரு சின்னத்தைத் தவிர்த்து வேறு ஏதாவது சின்னம் ஒதுக்கக் கோரியிருந்தால் அவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது"

என்று தேர்தல் குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.

அபேட்சகர் ஒருவர் தாக்கல் செய்துள்ள அபேட்சைகளில் முதல் பத்திரம் நிராகரிக்கப்பட்டு அதற்கடுத்து வேறு ஏதேனும் ஒரு பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும்கூட, நிராகரிக்கப்பட்ட பத்திரத்தில் எந்தச் சின்னம் ஒதுக்கக் கோரியிருந்தாரோ அதை ஒதுக்குவதற்கான பரிசீலனைகளே மேற்கொள்ளப்படுமாம்.

தேர்தலுக்கு நிற்கின்ற ஒரு அபேட்சகர், ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர் என்பதை நிரூபிக்க, அந்தக் கட்சியின் சார்பில் அடையாளம் தரப்பட வேண்டும். அந்த அபேட்சகருக்கு, அவர் சார்ந்துள்ள கட்சிக்கு ஒதுக்கப்பட்ட சின்னங்களே பெரும்பாலும் தரப்படும்.

அப்படி அந்த அபேட்சகருக்குக் கட்சிச் சின்னம் ஒதுக்கப்படுமானால், நியமனப் பத்திரத்தில் அவர் முதன்முதல் கேட்டுக்கொண்ட சின்னம் கொடுக்கப்படாமல் இருக்குமாம்.

அபேட்சகருக்கு எதிர்பாராத மரணம்!

ஷிமோகா, பிப். 2—

சட்டசபைத் தேர்தலில் போட்டியிட ஒரு அபேட்சகர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்தார். என்றாலும்கூட, அவர் தேர்தலுக்கு நிற்க முடியாதபடி எதிர்பாராதவிதமாக இறந்துவிட்டார்!

மைசூர் சட்டசபைக்கு சென்னகிரி தொகுதியில் போட்டியிட அபேட்சை தாக்கல் செய்த எம். எஸ். பாபண்ணா என்ற பி. சோ. கட்சி உறுப்பினர், நேற்று, தமது இல்லத்தில் திடீரென காலமாகி விட்டாராம்.

அவரது மறைவுக்காக அனுதாபம் தெரிவித்து, இங்கு இன்று முழுமையிலும் பூரண கடை அடைப்பு செய்யப்பட்டது.

வாக்காளர்களுக்குவழங்கும் அடையாளச் சீட்டு

தேர்தலில் பணிபுரியும் தோழர்கள் கவனத்திற்கு

புதுடில்லி, பிப். 3—

தேர்தலின்போது வாக்குப் பதிவு செய்யும் நாட்களில் வாக்குப் பதிவு நிலையங்களில், அந்தந்த அபேட்சகராலும் கட்சியாலும் வாக்காளர்களுக்கு அடையாளச் சீட்டுகள் வழங்கப்படுகிறது. இவ்வாறு செய்வதால், அந்தந்த வாக்காளர்களைப் பற்றிய சரியான அடையாளங்களைத் தெரிந்து கொள்வது சுலபமாக இருக்கும்.

அந்த அடையாளச் சீட்டில் வாக்காளரின் பெயர், வரிசை எண், பட்டியலில் அவரது பெயர் பதிவாகி இருக்கும் பக்கத்தின் எண், வார்டு அல்லது கிராமம் ஆகியவை பற்றிய விவரங்கள் அடங்கியிருக்கும்.

அத்துடன் அந்தச் சீட்டில், அபேட்சகர்களின் பெயர், அவர் சார்ந்துள்ள கட்சி, அவருடைய சின்னம் ஆகியவைகூட அச்சடிக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிகிறது.

இந்த அடையாளச் சீட்டில் ஏதாவது ஒரு கோஷம், அல்லது வேறு ஏதாவது ஆலோசனைகள் போன்ற இவைதவிர வேறெந்தத் தகவலும் அச்சடிக்கப்படலாம் என்றும், இப்படி அந்த அடையாளச் சீட்டுக்களில் இதுபோன்ற ஆலோசனைகள், கோஷங்கள் முதலானவை காணப்பட்டால், பதிவு நிலையங்களுக்கு 100 கெஜ தூரத்திற்குள்ளாக வாக்குச் சேகரிக்கும் சட்ட விரோத முயற்சி எனக் கருதப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தென்னகத்தின் நிலவளம்!

ஆந்திர மாநிலத்தில் 12 கோடி டன் சுண்ணாம்புக்கல் படிவங்கள்

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த குண்டூர் மாவட்டத்தின் சில பகுதிகளில்—குறிப்பாக மச்சேர்லா துணைத் தாலுகாவில், ஏராளமான அளவில் சுண்ணாம்புக்கல் படிவங்கள் கிடைப்பதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சுண்ணாம்புக் கற்கள் இரண்டு படிவங்களில் காணப்படுவதாகவும், இவைகளின் மொத்த மதிப்பு 12,40,00,000 டன் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

இவை மட்டுமல்லாமல், இன்னும் அதிகமான அளவில்—விரிவான முறையில் ஆராய்ச்சிகளையும் பரிசோதனைகளும் மேற்கொள்வதாக இருந்தால், மேற்கொண்டும் இப்பகுதிகளில் அதிகமான அளவு சுண்ணாம்புக்கல் சுரங்கங்களைக் கண்டுபிடிப்பது சாத்தியமாகலாம் என்றும் இந்திய 'ஜியாலஜிகல் சர்வே' நிறுவனம் தெரிவித்திருக்கிறதாம்.

கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சுண்ணாம்புக்கல் படிவங்களில், ஒரு சிறு அளவுக்கு 'பால்நாடு சுண்ணாம்புக்கல்' காணப்படுவதாகவும், இவ்வகைக் கற்கள் 'போர்ட்லண்ட் சிமெண்டு'த் தயாரிப்பதற்குப் பெரிதும் உதவுவன என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வகை 'டெபாசிட்'டுகள் நந்தி கொண்டா அணைக்கட்டுப் பகுதியை அடுத்த 25 மைல் சுற்றுப்புறப்பகுதிகளில் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பதும், இவைகளின்மூலம் நாகார்ஜுன சாகர் பலநோக்குத் திட்டத்திற்கு அருகிலேயே மற்றுமொரு சிமெண்டுத் தொழிற்சாலை நிர்மாணிக்க ஏதுவாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

தென்பகுதி இரயில்வேயில் பொன்மலையிலும் பெரம்பூரிலும் இரு க்ஷயரோக சிகிச்சை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விரு இடங்களிலும் இரயில்வே தொழிற்சாலைகள் இருக்கின்றன.

அடையாளச் சீட்டில் வாக்காளர்கள் கையொப்பமிட வேண்டுமாம்

சென்னை, சன 4—

கிழக்காணும் சென்னை சட்டசபைத் தொகுதிகளில் வாக்குப் பதிவு செய்யும் ஒவ்வொரு வாக்காளரும், தேர்தல் குழு குறிப்பிட்டுள்ள ஒரு அடையாளச் சீட்டில் தமது கையெழுத்தையோ அல்லது ரேகையையோ வைக்க வேண்டுமென்று தேர்தல் குழு உத்திரவிட்டிருக்கிறது.

தொகுதிகள் விவரம் வருமாறு:—

சென்னை வண்ணாரப்பேட்டை; துறைமுகத் தொகுதி; பேசின் பிரிட்ஜ்; பெரம்பூர்; ஆயிரம் விளக்கு; எழும்பூர்; திருவல்லிக்கேணி; மைலாபூர்; தியாகராயநகர்

வேலூர்; சேலம்-1; சேலம்-2; கடலூர்; தஞ்சாவூர்; திருச்சிராப்பள்ளி-1; திருச்சிராப்பள்ளி-2; மதுரை—கிழக்கு; மதுரை—சென்ட்ரல்; திருப்பரங்குன்றம்; கோயமுத்தூர்-1; கோயமுத்தூர்-2.

மருத்துவ மனைகளின் நிலை

டாக்டர் அகர்வால் படப்பிடிப்பு

கல்கத்தா, பிப் 2—

"மருத்துவ மனைகளில் ரேடியம் சிகிச்சை முறைக்குத் தேவையான சாதனங்களைப் பொறுத்தவரையில அவைகளைக் கையாள்வது குறித்து வரையறை செய்ய இந்திய சர்க்கார் தகுந்த சட்டமியற்றுவதுடன் குறிப்பிட்ட ஒரு சில நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர்களுக்கே அத்துறையில ஈடுபட அனுமதி தரவும் முன்வர வேண்டும்," என்று, டாக்டர் நிவான்சந்த் அகர்வால் என்பார், இங்கு நடைபெற்ற இந்திய 'ரேடியாலஜி காங்கிரசின்' 11-வது கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், பெரும் அளவிற்கு நோயாளிகள் சிகிச்சை பெறும் மருத்துவ மனைகள் தேவையான அளவுக்கு மருத்துவச் சாதனங்கள் இல்லாமலிருப்பதுடன், போதுமான அளவுக்கு அதிகாரிகளும், பணியாளர்களும் இல்லாமல் இருக்கின்றன என்றும், இந்த மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உணவு பூர்வமான திருப்திதான் ஏற்பட்டு வருகிறதே தவிர, இவைகள் வெறும் பிரச்சார மதிப்புள்ளவைகளாகவேதான் இருக்கின்றன என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பொதுத் தேர்தல்

சில புள்ளி விபரங்கள்

புதுடில்லி, பிப் 3—

இத்தேர்தலில், டில்லிப் பாராளுமன்றத்திற்கான நாடு முழுமையிலுமுள்ள மொத்தத் தொகுதிகள் 494 என்றும், எல்லா மாநில சட்டசபைகளுக்குமான மொத்தத் தொகுதிகள் 3 102 என்றும், நாடு முழுமையிலும் நிறுவப்பட்டிருக்கும் மொத்த வாக்குச் சாவடிகள் எண்ணிக்கை 2 00,000 என்றும், மொத்தம் 29 60,000 வாக்குப் பெட்டிகள் உபயோகப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒருவரே 14 இடங்களில்!

பீகாரில் சனதா கட்சித் தலைவரான ராம்கார் இராச பகதூர் என்பவர் ஹசாரிபாக் மாவட்டத்தில் 12 இடங்களில் அபேட்சாபத்திரம் தாக்கல் செய்துள்ளாராம்.

இதைத் தவிர, சிங்பூம் மாவட்டத்திலும் இரு தொகுதிகளில் அவர் போட்டியிடுகிறாராம்!

சென்னை-அயன்புரம் பாரதிதாசன் நூல் நிலைய ஆண்டுவிழா

தி. மு. கழக முன்னணி வீரர்கள் கொள்கை முழக்கம்

சென்னை, பிப். 4—

சென்னை—அயன்புரம் மார்க்கெட் மைதானத்தில், பாரதிதாசன் நூல் நிலைய 6-வது ஆண்டு விழா நேற்று மாலை சிறப்பாக நடைபெற்றது. தோழர் ந. வீரபத்திரன் முன்மொழிய தோழர் சு. குப்புசாமி வழிமொழிய தோழர் ந. வரதன் தலைமை தாங்கினர்.

கூட்டத்துவக்கத்தில், தோழர் வி. கே இராதா அவர்கள் தி மு. கழகத் தோழர்களுக்கு தேர்தலில் ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர் தோழர் வை. மேகநாதன் ஆண்டறிக்கை வாசித்தார. தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக 21-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில் ரூ. 75 தோழர் ஆசைத்தம்பியிடம் அளிக்கப்பட்டது.

துவக்கத்தில் பேசிய தோழர் வி. எஸ். கோவிந்தராசன், சனநாயகத்தைச் சவக்குழிக்கு அனுப்பும் காங்கிரசாரின்கயமைதனத்தை விளரித்தும், எதிலும் முரண்பாடு கொண்டகம்யூனிஸ்டுகட்சியினரின் சத்தற்ற பேச்சையும், போக்கையும் ஆதாரத்துடன் எடுத்துக் கூறியும் சொற்பொழிவாற்றினர்.

அடுத்து, தோழியர் சத்தியவாணி-முத்து, இந்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் பாடுபடுகிறது என்றும், மற்றக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் வடநாட்டுக்காரர்களாய் இருப்பதினால் தென்னவரின் வாழ்க்கையிலே அக்கரைகாட்ட முடியாது—இதுவரை எந்த உரிமைக்காகவும் மற்றக் கட்சிகள் பாடுபடவில்லை என்பதை விளக்கியும், தி. மு. கழகம் மக்கள் கட்சி என்பதைக் கூறி அதற்கு ஆதரவினைத் தாருங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

தோழர் டி. கே. சீனிவாசன், இந்திய ஒற்றுமை பற்றிப் பேசுவதெல்லாம் சத்தற்ற வாதம் என்பதைத் தெளிவாக விளக்கியும், வடநாட்டுடன் சேர்ந்திருப்பதால் தமிழகம் படுகின்ற கஷ்டத்தையும், பிரிந்து தனித்து அரசோச்சினால் நாட்டின் வளம் பெருகும் தன்மையையும் விளக்கினர்.

இறுதியாகத் தோழர் ஏ. வி பி ஆசைத்தம்பி, காங்கிரசார் கடந்த ஒன்பதாண்டுகளில் மக்களுக்குச் செய்த நன்மைகள் என்ன என்பதை வினா எழுப்பி, காங்கிரஸ் ஆட்சியிலே மக்கள்பட்ட அவதிகளையும் அனுபவித்த கஷ்டங்களையும் குறிப்பிட்டு, நம் நாட்டு மக்களுக்கு சுபீட்சம் வேண்டுமானால் தி. மு. கழக அபேட்சகர்களை மக்கள் ஆதரிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (ந. நி)

ஆமதாபாத் தி. மு. க. தோழர்களுக்கு:

"தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு முதல் முறையாக ரூ 1,300 அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை தேர்தல் நிதி தராத தோழர்கள் இத்திங்கள் 15-க்குள் நிதி தந்து ஆ மா. தி. மு. கழகச் சார்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள இரசீதுகளை பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன். நிதி அளித்த தோழர்களுக்கு இதுவரை இரசீது கிடைக்கவில்லை எனில், அவர்கள் யாரிடம் தேர்தல் நிதி அளித்தார்களோ அவர்கள் மூலமே இரசீது பெற்றுக் கொள்ளலாம். தி மு. கழகத் தேர்தல் நிதியின் பெயர் சொல்லி வேறு சிலரும் நிதி திரட்டுவதாகத் தெரிகிறது. எனவே நிதி கொடுக்கும் தோழர்கள் மாவட்டக் கழகச் சார்பில் அச்சிடப்பட்டுள்ள தேர்தல் நிதிப் புத்தகம் இல்லாத தோழர்களிடம் நிதி தந்து ஏமாற வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்"

என்று, ஆமதாபாத் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. தணிகாசலம் அறிவிக்கிறார்.

இலங்கை தமிழர் குறைகளைத் தீர்க்க!

சர்வகட்சி மாநாடு கூட்ட ஆலோசனை

பண்டா சர்க்காருக்கு சனநாயகக் காங்கிரஸ் எச்சரிக்கை

கொழும்பு, பிப். 3—

"இலங்கையிலுள்ள தமிழ் மொழி பேசும் சிறுபான்மை மக்களின் குறைகளைத் தீர்த்துவைக்க, இலங்கை சர்க்கார் உடனடியாக, இலங்கையிலுள்ள எல்லா கட்சிகளையும், வகுப்பாரையும் கொண்ட மாநாடு ஒன்றை நடத்த வேண்டும்; இந்த ஏற்பாட்டில் சிறிதளவுகூடக் கால தாமதம் செய்யக்கூடாது.

"இன்று இலங்கையில் நிலவி வரும் இன உணர்ச்சியின் வேகம் இன்னும் அதிகப்பட்டு, அதிகமான அளவில் நிலைமை மோசமாவதற்குள்ளாகவே இத்தகைய ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாக வேண்டும்."

இவ்வாறு, அண்மையில், கொழும்பில் நடைபெற்ற இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் ஒன்றில், இலங்கை சர்க்கார் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

"இன்றுள்ள இந்த வகுப்புவாரி உணர்ச்சிகளையெல்லாம் கட்டுப்படுத்தி, மக்களிடையே வகுப்புவாரி ஐக்கிய உணர்ச்சியையும், தேசிய ஒருமைப்பாடு உணர்வையும் ஏற்படுத்தத் தவறுமானால், நாட்டில் மேற்கொள்ளப்பட இருக்கிற எந்த ஒரு பொருளாதாரத் திட்டமும் உருப்படாமற்போக ஏதுவாகும் என்றும், அந்தக் குழு இலங்கை சர்க்காரை எச்சரித்திருக்கிறது.

இலங்கையில் இந்த அளவுக்கு—வெளிப்படையாகப் பெருமளவில் இனபேத உணர்ச்சி நிலவுவதற்குச் சர்க்காரின் குறுகிய மனப்பான்மையும், வகுப்புத் துவேஷ உணர்வுமே தான் காரணம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

தி. மு. கழக தேர்தல் நிதிக்கு ரூ. 1,330 காணிக்கை

ஆமதாபாத் தோழர்கள் அன்பளிப்பு

ஆமதாபாத், பிப். 3—

ஆமதாபாத்—ஜமால்பூர், தி மு கழகத்தின் சார்பில், சென்ற மாதம் 26-ந் தேதி, புதிய முனிசிபல் சாலில் அமைந்துள்ள திடலில் மாபெரும் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் சிறப்பான முறையில் நடைபெற்றது.

விழாக் கூட்டத்தில் ஆமதாபாத் மாவட்டத் தி மு கழகச் சார்பில், தி. மு க தேர்தல் நிதிக்கு முதல் தவணையாக ரூ 1,337—8—3 அளிக்கப் பட்டது.

கூட்டத்திற்கு தோழர் அ. கலைமணி முன்மொழிய, தோழர் இரா. தணிகாசலம் வழிமொழிய, தோழர் இரா. வைத்தியலிங்கம் தலைமை வகித்தார். தோழர் ஆர். பி சுந்தரம் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத் துவக்கத்தில், தோழர்கள் பெருமாள், நா. தேவராசு ஆகியோர் பேசினர்.

அடுத்து, ஆமதாபாத் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்குழுத் தலைவர் தோழர் மு நமச்சிவாயம் அவர்கள் தி மு.க. தேர்தல் நிதிக்கு மாவட்டச் செயலாளரிடம் ரூ 1,337—8—3 கொடுத்து, தேர்தல் நிதிக்கு உதவிய கழகத் தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

அடுத்து, சிறுமி தமிழ்மணியின் (ஏ. எஸ். ரூபி) நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது. (ந-நி)

உடற்கல்வி ஆசிரியர்கள் முதல் மாநாடு

முசிறி, பிப். 1—

திருச்சி மாவட்ட மன்ற உடற்கல்வி ஆசிரியர்கள் கழக முதல் மாநாடு, சனவரி 30-ந் தேதியன்று முசிறி இராமகிருஷ்ணா டாக்கீசில் மாவட்ட காவல்துறை துணைக் காவலர் திரு. வி. ஐ. சுரேஷ்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை தோழர் தங்கவேல் திறந்து வைத்தார். தோழர் அன்பில் - தருமலிங்கம் அவர்களும் மற்றும் பலரும் பேசிய பின்னர் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. (ந-நி)

வடசென்னை தி. மு. க. அபேட்சகருக்கு ஆதரவு

விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் முடிவு

சென்னை, பிப். 2—

சென்னை—வண்ணாரப்பேட்டை தொகுதியில் சட்டசபைக்குப் போட்டியிடும் அபேட்சகர்களில், தி மு கழக அபேட்சகர் தோழர் என். ஜீவரத்தினம் அவர்களையே ஆதரிப்பதென, நேற்று இரவு இங்கு நடைபெற்ற வடசென்னை இராசு ஞாபகார்த்த விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றில் முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இத்தொகுதியில் போட்டியிடும் 6 பேர்களில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்துச் சிறிது நேரம் உறுப்பினர்களிடையே விவாதம் நடைபெற்று, பின்னர் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது, பெருவாரியான வாக்குகளால் தோழர் ஜீவரத்தினம் அவர்களுக்கே உதவுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தேர்தலில் தி. மு. கழக வெற்றிக்கு உழைக்க

திராவிட முடிதிருத்தத் தொழிலாளர் சங்க உறுதி

ஈரோடை, பிப். 1—

வருகிற பொதுத்தேர்தலில், மக்கள் சபைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு வாக்களித்து, அவர் வெற்றிபெறப் பணியாற்றுவதென, நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற ஈரோடை முடிதிருத்தத் தொழிலாளர் சங்கக் கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் இக்கூட்டத்தில், சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிடாத ஆட்சியாளரின் ஆணவப்போக்கைக் கண்டித்தும், உடனடியாகத் தமிழ்நாடெனப் பெயரிடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

திரு. கி. கருப்பையா தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் சில தோழர்கள் சங்க வளர்ச்சி குறித்துப் பேசினதுடன், விரைவில் திராவிட முடிதிருத்தத் தொழிலாளர்கள் சார்பில் தி. மு. கழகத் தேர்தல்நிதி அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அத்தொகுதியில் சென்னை சட்டசபைக்குப் போட்டியிடும் சோஷலிஸ்டுக் கட்சி அபேட்சகர் திரு எம். சின்னசாமிக்கு ஆதரவு தருவதெனவும் முடிவு செய்யப் பட்டது.

மேற்கண்ட முடிவு மேற்கொள்ளப்பட்டதையொட்டி, தோழர்கள் எம். சுப்பையா, டி. எம். பாண்டியன், பி வி. பாண்டியன், வி. கே. சுந்தரம், டி. எம். சுப்பிரமணி ஆகியோரை முறையே தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகக் கொண்ட நிர்வாகக் குழுவும் மற்றும் 6 பேரடங்கிய செயற்குழுவினரும் அடங்கிய தேர்தல் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இக்கூட்டம், தோழர் பி. வி. பாண்டியன் தலைமையில் கழக இல்லத்தில் நடைபெற்றது. (ந. நி)

இந்தியாவிலேயே ஊசிகள் உற்பத்தியாம்!

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கேட்டி என்னுமிடத்திலுள்ள தொழிற்சாலையில் நூல் கோர்த்துக் கையினால் தைப்பதற்குப் பயன்படும் ஊசிகள் உற்பத்தி விரைவில் தொடங்கப்பட இருக்கிறது.

இந்தியாவில் ஊசி உற்பத்தி தொடங்கப்படுவது இது தான் முதல் தடவையாம்!

இந்தத் தொழிற்சாலையில், இது வரையில் கிராமபோன் ஊசிகளே உற்பத்தியாகி வந்தன.

க்ஷயரோக சிகிச்சை நிலையங்கள் ஏற்படுமாம்

புதுடில்லி, பிப். 4—

இந்திய இரயில்வேயின் ஒவ்வொரு மாவட்டத்திலும் அல்லது பிரிவிலும் நவீன வசதிகளுடன் கூடிய க்ஷயரோக சிகிச்சை நிலையங்களை கட்டாயம் ஏற்படுத்துமாறு இரயில்வே நிறுவனம் சட்டமொன்றைப் பிறப்பித்திருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க.—தேர்தல் பிரச்சார

சிறப்பு மாநாடு

சென்னை-எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

10—2—57 ஞாயிறன்று நடைபெறும்

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமை தாங்குவார்.

★

- ★ நாட்டுக்கு நல்லாட்சி
- ★ சர்வாதிகாரத்தின் எதிர்காலம்
- ★ காங்கிரஸ் ஆட்சியின் ஊழல்கள்
- ★ தி. மு. கழகமும் பொதுமக்களும்
- ★ தேர்தல் பிரச்சார முறைகளும் தன்மையும்

என்பதைப்பற்றி

அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்
மு. கருணாநிதி	சி. பி. சிற்றரசு
கே. ஏ. மதியழகன்	சத்தியவாணிமுத்து
க. அன்பழகன்	காஞ்சி—கல்யாணசுந்தரம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	நாஞ்சில் மனோகரன்

ஆகியோரின் விளக்க உரைகள்

தி. மு. கழகத் தேர்தல் அறிக்கை (Election Manifesto) மாநாட்டில் பிரகடனப்படுத்தப்படும்.

இரவு 10-மணிக்கு—நாடகம் உண்டு

மற்ற விவரங்கள் அடுத்து அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்னை நகரில் சிறப்புக் கூட்டம்

தோழர்கள் டி.கே.சீனிவாசன், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி கலந்துகொண்டனர்

சென்னை, பிப் 5—

சென்னை 8-வது வட்ட தி மு கழகத்தின் சார்பில், நேற்று காலை 10 மணியளவில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக, மெமோரியல் மண்டபத்தில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் ஏ எஸ். வேணு தலைமை தாங்கினர்

தலைமையுரைக்குப்பின், தோழர் டி. கே. சீனுவாசன் அவர்கள் சிறிதுநேரம் 'ஜனநாயகம்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினர்.

பின்னர் தோழர் க. அன்பழகன் அவர்கள், தேர்தலில் தி. மு. கழகத்தின் ஈடுபாடு குறித்தும், கழகத் தோழர்களின் கடமை குறித்தும் பேசினர்.

இறுதியில் தோழர் ஏ. வி பி ஆசைத்தம்பி அவர்கள் 'தி மு கழகமும் தொழிலாளர் பிரச்சினைகளும்' என்ற தலைப்பில் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறப்பட்டு, கூட்டம் பகல் $1\frac{1}{2}$ மணியளவில் முடிவுற்றது.

கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர். மண்டபத்திற்கு உள்ளும் புறமும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. (ந. - நி)

கருத்துக்களைக் கேட்டுவந்த மக்கள் அடுத்த கட்டத்திற்குத் தயாராக வேண்டும்

பாகிஸ்தான் அமைவதற்கு வழிவிட்ட நேரு பண்டிதர் திராவிடநாடு தனியாகப் பிரிவதற்கு மறுப்பானேன்?

சென்னை சிறப்புக் கூட்டத்தில் அன்பழகன் கேள்வி

சென்னை, பிப். 5—

சென்னை 8-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில் நேற்று முன் தினம் சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"நம்மீது மக்கள் கொண்டிருந்த சந்தேகம் நீங்கிவருகிறது. அதை உறுதிப்படுத்தும் அருமையான சட்டங்கள் உருவாகிக்கொண்டு வருகின்றன. எனவே, இதுவரை யிலும் கூட்டங்களிலே நமது கருத்துக்களை மட்டும் கேட்டார்கள், இனிமேல் அடுத்தக் கட்டத்திற்கு வந்தாக வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

"இன்று இந்த நாட்டை ஆளுகிற சர்க்கார் சனநாயக சர்க்கார்—மக்களாட்சி சர்க்கார் என்று கூறப்பட்டு வருகிறது. அந்த சர்க்கார் சனநாயக சர்க்கார் அல்ல என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துவைத்திருக்கிறோம் அதை மக்களும் தெளிவாகத் தெரிந்து கொள்ள நாம் வேலை செய்தாக வேண்டும்.

"சனநாயக சர்க்கார் என்பது மக்களுக்காக—மக்களால், மக்களைக் கொண்டு நடத்தப்படும் ஆட்சி! இன்றிருக்கிற சர்க்காரோ, மக்கள் வாக்கைப் பெற்று மன்றம் ஏறி மக்களைக்கொண்டே நடத்தும் ஆட்சியாகத்தான் கூறுகின்றனர். ஆனால் மக்களுக்காக ஆட்சி நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் சர்க்காருக்கு இருக்க வேண்டிய பொறுப்பு உணர்ச்சி அவர்களுக்கு இருக்கிறதா என்பதுதான் பிரச்சினை.

"இன்று அமைச்சர்களாக வீற்றிருப்பவர்களிடையே பண்பில்லை; ஆட்சிபீடம் மக்களின் கையிலில்லை; சர்க்காரோ, பொறுப்பற்ற சர்க்கார்; இதை நாம் பொது மக்களுக்கு விளக்கித் தீர வேண்டும். அதை நாம் இப்படி மேடைகளில் நின்று பேசுவதைவிட, நம்முடைய நண்பர்களைச் சந்திக்கும் இடங்களிலேயும், வீடுகளில் அடுப்பங்கரையில் பழகும் போதும் எடுத்துக்கூற வேண்டும் — பழகவேண்டிய முறைப்படி.

"நாமும் இனிமேல் பேசினால் மட்டும் போதாது; அதைச் செயல்முறையிலும் செய்து காட்டுவது என்று முடிவு செய்தாகவேண்டும்.

"இரயில்வே துணை அமைச்சராக இருக்கும் அழகேசன் காஞ்சியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசினாராம் — 'இவர்களுக்கு என்ன தெரியும்? பேசத் தெரியும்; எழுதத் தெரியும்; வேறென்ன தெரியும்?'—என்று கேட்டாராம்! 'தி. மு. கழகத்தவருக்கு எழுதத் தெரியும், பேசத் தெரியும், உழைக்கத் தெரியும்; எனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது,' என்பதுதான் அழகேசன் இப்படிக் கேட்பதின் பொருள்! 'எனக்கு இதெல்லாம் தெரியாது; வெறும் மந்திரியாக இருந்து மாதாமாதம் சம்பளம் வாங்கத்தான் தெரியும்' என்று அவர் சொல்லாமல் சொல்கிறார். உண்மைதான்; அழகேசனுக்கும் நமக்குமுள்ள தூரம் மிகமிக இடைவெளி உள்ளது; பகுத்தறிவுக்கும் மூடநம்பிக்கைக்குமுள்ள தூரம்; இந்தியாவின் 100 ஆண்டுக்கால வரலாற்றில் உள்ள இடைவெளித் தூரம்! அவர் இப்படி நம்மை எதிர்ப்பதற்கெல்லாம் காரணம், அவர் சார்ந்திருக்கிற கட்சியில் மக்களிடம் சென்று தங்கள் நிலைமையைப் பற்றி எடுத்துக்கூற ஆள் இல்லை என்ற பொறுமை! ஒரு பிச்சம் மீதியாக இருக்கும் நேருவும், காரண காரியங்களோடு பேசும்போதுகூட, திராவிட நாடு என்ற பெயர் கேட்டதுமே அவரது பேச்சு தண்டாடிவிடுகிறது.

"திராவிட நாடு என்ற கோரிக்கையைக் கேட்டதுமே 'திராவிட நாட்டைப் பிரிக்கவிடமாட்டேன்,' என்று சொல்லிவிட்டார். இவர் இதேபோலத்தான் முன்பும் ஒரு முறை சொன்னார்—'பாகிஸ்தானை எக்காரணம் கொண்டும் பிரிக்க விடமாட்டேன்,' என்று! ஆனால் என்ன ஆயிற்று? பாகிஸ்தான் தர முடியாது என்று கூறிய அதே நேரு பண்டிதர்தான் பாகிஸ்தானைப் பிரித்துக்கொடுத்தார். இந்தியாவின் எல்லைக்குள்ளேயே அடங்கிய காஷ்மீர் இன்று அவர் கையில் இல்லை; ஆனால் திராவிட நாட்டை மட்டும் பிரிக்கமாட்டாராம்!

"இதற்குக் காரணம் என்ன? இந்த நாடு நல்ல வளமிக்க நாடு; சுரண்டுவதற்குத் தகுந்த இடம் என்பதை அவர் கண்டு கொண்டார்; அதனால்தான்; 'பிரிக்க முடியாது' என்று கூறுகிறார். பழைய காலத்து நவாபுகள் பேசுவதுபோல், சனநாயக யுகத்தில் சர்வாதிகாரம் தொனிக்கப் பேசுகிறார்!

"முதலில் அவர், திராவிடத்தைப் பிரிக்கமாட்டேன் என்று கூறுவதே தவறு என்று நாங்கள் கூறுகிறோம். 'வட நாட்டுடன் திராவிடத்தைச் சேர்த்துக் கொண்டிருப்பது தவறு!—திராவிடத்தில் வடநாட்டு ஏகாதிபத்தியம் நடைபெறுவது தவறு;' என்று நாம் கூறுகிறோம். நாம் திராவிடத்தைப் பிரிப்போம் என்பதுகூடத் தவறு; நாம் அவர்களுடன் சேர்ந்திருக்க மாட்டோம்—சேர்ந்திருப்பதுதான் தவறு என்று கூறுகிறோம்.

"திராவிடம் ஒரு தனி நாடு; அது ஒரு தனிநாடாக இருக்க என்னென்ன தகுதிகள் எல்லாம் பெற்றிருக்க வேண்டுமோ, அத்தனை தகுதிகளையும் பெற்ற நாடு திராவிடம். அத்தகுத் தனிப் பண்பாடு பெற்றத் திராவிடம் தனி நாடாக மலர்வது, வடநாட்டிலிருந்து துண்டாடப்படுவது அல்ல; மாறுபட்டப் பண்பாடுடைய வடநாட்டுடன் இணைப்புக் கொண்டிருப்பதுதான் தவறுதும்.

"இந்தக் கருத்தை நாம் நேருவுக்கு இப்படிக் கூட்டங்கள் மூலமாகச் சொல்கிறோம். என்றாலும், இதை மக்கள் அறிந்துகொள்ள, கழகத் தோழர்கள் வீடு வீடாகச் சென்று சொல்லவேண்டும்.

"காங்கிரஸ் ஒரு சனநாயகக் கட்சி அல்ல; எனவே, அதற்கு மாறாக ஒரு சனநாயக எதிர்க்கட்சி அமைக்க வேண்டும் — உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாம் தேர்தலில் ஈடுபடுகிறோம். நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சி ஒழுங்கான முறையில் நிர்வகிக்க முடியாத நிலை ஏற்படுகிறபோது—தமிழ் நாட்டின் பிரச்சினைகளைப் பாதுகாக்கக் காங்கிரஸ் தவறும்போது — காங்கிரசை ஆட்சியிலிருந்து அகற்றி, திறமையுடன் ஆளத் தகுந்த மற்றொரு கட்சி தி. மு கழகத்தைத் தவிர வேறு இந்த நாட்டில் எந்தக் கட்சி இருக்கிறது?"

கேட்டது 16 கோடி……

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டில்லி சர்க்காரிடம்; ஆனால் அந்தத் திட்டத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாதென டில்லி கைவிரிக்கவே. சென்னை சர்க்கார் திட்டத்தைக் கைவிட்டு விட்டிருக்கிறது!

இதுபோலவே மின்சார விநியோகத்திற்கு சென்னை ரூ 6.22,00,000 கேட்டதற்கு டில்லி சர்க்கார் ரூ 4,50,00,000 மட்டுமே தந்திருக்கிறது.

இது தவிர, சென்னை அரசாங்கத்தின் குந்தா திட்டச் செலவிலும் ரூ 1 கோடியைக் குறைத்து விட்டிருக்கிறது டெல்லிப் பேரரசு!

அண்ணா விளக்கம்……

(முதல் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. மாம்பழம், சுவை மிக்கது—ருசியுள்ளது என்பதாலேயே, அதற்காக ஏங்கிக்கொண்டிருக்கக்கூடாது.

"நேரு பண்டிதர் நம்மவரல்ல; எனவே, நம்மை வாழ்விக்க அவரால் முடியாது; அவரது மனம் இடந்தராது; காரணம், அவர் வடவர்; நாம், இந்த நாட்டவர் — இந்த நாட்டுக்கு உரியவர்கள் என்பதை வாக்காளர்கள் எண்ணிப் பார்த்தாக வேண்டும்."

மதுரை மாவட்டத் தோழர்களுக்கு:

"மதுரை மாவட்டம் வேடசந்தூர் தொகுதியில் தி. மு. கழகம் இதுவரையில் எவரையும் ஆதரிக்கவில்லை. கந்தசாமி என்ற பெயருடைய ஒருவர் சில தினங்களுக்கு முன் என்னிடம் வந்தார். ஆனால் அவரை 4-ந்தேதிக்கு மேல் வாருங்கள்—யோசிக்கலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டேன். இந்த நிலையில் 'வேடசந்தூர் தி.மு. கழகத் தேர்தல் அலுவலகக் குழுவினர் சுற்றுப்பயணம்' என்று சில ஊர் பெயர்களைக் குறிப்பிட்டு ஒரு துண்டுப் பிரசுரம் வெளியாகியிருக்கிறது. இந்தப் பிரசுரத்திற்கும் தி. மு. கழகத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் தி. மு. கழகத் தோழர்கள் எவரும் தலைமைக் கழகத்தின் அதிகார பூர்வமான அறிக்கை வரும் வரையில், எவரையும் ஆதரிக்கவோ அல்லது, எவருக்காகவும் தேர்தல் வேலை செய்யவோ கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்"

என்று மதுரை மாவட்டத் தி மு. கழகச் செயலாளர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

ரஷ்யாவின் போக்கினை பிரான்சும் பின்பற்றுகிறது

அல்ஜீரிய விவகாரத்தில் தலையிட ஐ. நா.-வுக்கு உரிமை இல்லையாம்!

அது பிரான்சின் உள்நாட்டு விவகாரமாம்

ஐ நா, பிப். 4—

'அல்ஜீரியப் பிரச்சினை குறித்து எந்தவித முடிவும் மேற்கொள்ள ஐ நா. சபை அருகதை அற்றது' என்று, பிரெஞ்சு வெளி விவகார மந்திரி பினோ கூறினாராம்!

பிரச்சினைக்குப் பரிகாரம்?

அல்ஜீரியப் பிரச்சினைக்குப் பிரெஞ்சு சர்க்கார், பரிகாரத் திட்டம் ஒன்று தயாரிப்பதாகக் கூறிய பினோ, அதனை விளக்கு கையில் 'தேர்தல் நடத்தவழி செய்யும் வகையில் முதலில் போர் நிறுத்தம், உண்மையான சனநாயக நாடுகளின் பிரதிநிதிகள் மேற்பார்வையில் சுதந்திரமான தேர்தல், முஸ்லிம் மற்றும் ஐரோப்பிய சமூகங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோடு அல்ஜீரியாவின் எதிர்காலம் பற்றிப் பேச்சுவார்த்தை, குறிப்பிடத் தகுந்த பொருளாதார உதவியை நிரந்தரமாக அளிப்பது என்றும் குறிப்பிட்டாராம்.

நிரந்தரமாக அளிப்பது என்றும் குறிப்பிட்டாராம்.

உள்நாட்டு விவகாரமாம்!

மேலும், பேசிய பினோ, ஐ நா. சாசனத்தின் 7-ம் பகுதியின் இரண்டாம் விதி, ஐ நா. உறுப்பினராயுள்ள நாடு ஒன்றின் உள்நாட்டு விவகாரத்தில் ஐ நா. தலையிடக் கூடாது என்று கூறுவதைச் சுட்டிக் காட்டி, 'எனவே, அல்ஜீரிய விவகாரத்தில் ஐ. நா. தலையிடக் கூடாது' என்று வாதிட்டாராம்.

காரணம் என்ன?

'அல்ஜீரிய விவகாரம் தீர்வு காணப்படாமலிருப்பதற்குள்ள ஒரே காரணம், அல்ஜீரியப் புரட்சிக்காரர்களுக்கு ஆதரவாகப் பல வல்லரசுகள், அல்ஜீரிய விவகாரத்தில் தலையிட்டு வருவதுதான்' என்றும் பினோ கூறினாராம்!

★

மகத்தான வேலை நிறுத்தம்

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு (சென்ற திங்கள்கிழமை) தொடங்கிய வேலை நிறுத்தம், அல்ஜீரியா முழுவதும் பரவி, பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கின்றது.

அடக்குமுறை

வேலை நிறுத்தம், தேசியவாதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க நடைபெறுகிறது. அந்த வேலை நிறுத்தம் நீடிப்பது கண்ட பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் கொடுமையான அடக்குமுறைகளின் மூலம் வேலை நிறுத்தத்தை முறியடிக்க முயற்சித்துத் தோல்வி கண்டிருக்கின்றனர்.

124 பேர் பலி

ஆட்சியாளர் தந்துள்ள கணக்குப்படி, இந்த ஒரு வாரத்தில் அமைதியான வேலை நிறுத்தத்தை முறியடிக்க இராணுவம் மேற்கொண்ட பலாத்கார நடவடிக்கைகளினால் 124 பேர் பலி கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

லாரிகளில்!

வேலைக்கு வரமறுக்கும் தொழிலாளர்களையும், கடை திறக்க மறுக்கும் வியாபாரிகளையும் இராணுவத்தினர் வீடு தேடிச் சென்று தட்டி எழுப்பி, அதட்டி மிரட்டி இராணுவ லாரிகளில் ஏற்றி வேலைக்கு இழுத்துச் செல்லுகின்றனராம்—கொடுமைப்படுத்துகின்றனராம்!

வேலை நிறுத்தப் போராட்டம் இரண்டொரு நாட்களில் நிறுத்தப்படலாம்.

எதிர்ப்புக்கு மேல் எதிர்ப்பு

காங்கிரசாரை எதிர்க்க அகாலி தளத்தவர் முடிவு

அமிர்தசரஸ், பிப். 1—

டில்லி பாராளுமன்றத்திற்கும், மாநில சட்டசபைக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிறுத்திவைக்கப்படுகிறவர்களை எதிர்த்து நிற்கும் அபேட்சகர்களை ஆதரிப்பதென, இங்கு, நேற்று நடைபெற்ற சுமார் 200 பேரடங்கிய அகாலிகள் கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த பல தொகுதிகளிலிருந்து, இந்த அகாலிதளத்தைச் சேர்ந்த சுமார் 60 பேர், காங்கிரசுக்கு எதிராக சுயேச்சையாகப் போட்டியிட தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

கடந்த மாதம் 26-ந் தேதி நடைபெற்ற அகாலிகள் கூட்டம் ஒன்றில்தான், இதே அகாலிகள், காங்கிரஸ் கட்சியினரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, தேர்தலில் காங்கிரசை ஆதரிப்பதென முடிவு செய்திருந்தனர் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

அதிருப்தி வளருகிறது?

சப்ரா, (பீகார்), பிப். 3—

"அங்கேரியைப் பற்றி நாம் உண்மையை வெளிப்படுத்தியது ரஷ்யாவுக்குப் பிடிக்கவில்லை; அதைப்போன்று, வேறு பிரச்சினைகளில் அமெரிக்காவுக்கும் நம்மிடம் அதிருப்தி உண்டு. ஆனால் இந்தியா எந்த வல்லரசுக்கும் கீழ்ப்படியாது" என்று காங்கிரஸ் தலைவர் தேபர் காஷ்மீர் தகராறு பற்றிப் பேசுகையில் கூறியுள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் தமிழ் நிர்வாக மொழியாகிறது

சென்னை, பிப். 2—

இதுவரையிலும் திருச்சி மாவட்டத்தின் எல்லைக்குள் அடங்கிய நிர்வாகத் துறைகளில், தமிழ் மொழியே பரீட்சார்த்த ஆட்சி மொழியாக இருந்துவந்தது. இதுவரையில் இந்தப் பரீட்சார்த்த ஆட்சிமொழி ஏற்பாடு ஒவ்வொரு ஆண்டும் நீடிக்கப்பட்டே வந்தது.

இப்போது, இப்பரீட்சார்த்த நிலையைமாற்றி, இனிமேல் அங்குள்ள எல்லா நிர்வாகப் போக்குவரத்துகள் அனைத்தும் தமிழ் மொழியிலேயே நிரந்தரமாக நடத்துவதென்றும், இதனை இந்த ஆண்டுத் துவக்கமுதல் அமுலுக்குக் கொண்டுவந்து விடுவதெனவும் முடிவு செய்து, சர்க்கார் அறிவிப்பொன்றை வெளியிட்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.